Album 35 Song 1

hallelujah

கர்த்தரின் மகிமை பெரியது
The Glory of the Lord is Great

KJC - DNN

கர்த்தரின் மகிமை பெரியது

Thu. DATE 10|05|2007

138 சங்கீதம்

கர்த்தரின் மகிமை பெரியது - ஆதலால்
கர்த்தரின் வழிகளைப் பாடுவோம்
கர்த்தர் மிகவும் பரிசுத்தமானவர் - ஆதலால்
கர்த்தரின் ஆலயத்தில் பணிந்துகொள்வோம்


நானும்மை என் முழு இருதயத்தோடும் துதிப்பேன்
தேவர்களுக்கு முன்பாக உம்மைப் பாடுவேன்
உமது கிருபையினிமித்தம் உம் நாமத்தைத் துதிப்பேன்
உமது உண்மையினிமித்தம் உம் வேதத்தைத் துதிப்பேன்
(கர்த்தரின் மகிமை)

நானும்மைக் கூப்பிட்ட நாளில் எனக்கு அருளினீர்
என் ஆத்துமாவிலே பெலன் தந்து தைரியப்படுத்தினீர்
உம் வாயின் வார்த்தைகளைக் கேட்கும்போது உம்மைத் துதிப்பேன்
நான் துன்பத்தின் நடுவில் நடந்தாலும் என்னை உயிர்ப்பிப்பீர்
(கர்த்தரின் மகிமை)

கர்த்தர் உயர்ந்தவராயிலும் என்னை நோக்கிப் பார்க்கிறார்
மேட்டிமையானவனையோ தூரத்திலிருந்து அறிகிறார்
என் சத்துருக்களுக்கு விரோதமாக தன் கையை நீட்டுகிறார்
தமது வலக்கரத்தாலே என்னை இரட்சிக்கிறார்
(கர்த்தரின் மகிமை)

கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிக்கிறார்
அவருடைய கிருபையால் என்னை நிரப்புகிறார்
தமது கரத்தினால் கிரியைகளை நெகிழவிடாதிருக்கிறார்
தமது வார்த்தைகளை கர்த்தரே மகிமைபடுத்தியுள்ளார்
(கர்த்தரின் மகிமை)




THE STONE THE BUILDERS REJECTED HAS BECOME THE CORNERSTONE
BLESSED IS HE WHO COMES IN THE NAME OF THE LORD
HOSANNA!
IN THEHIGHEST!
HOSANNA!
REJECTED
HALLELUJAH
HALLELUJAH
HALLELUJAH